அசல் வழக்கு எண். 279/2019 வா.சா.1. கிரேஸி ஜாஸ்மின் புளோரா
க/பெ சாமுவேல்கருத்தழகன்

**14.02.2023 குறுக்கு விசாரணை**

1. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லிஉள்ளவாறு 15.05.2017 தேதியிட்ட ஆவண எண்.2618/2017 செட்டில்மென்ட் பத்திரம், 05.07.2017 தேதியிட்ட ஆவண எண்.3805/2017, 3806/2017, 3807/2017, செட்டில்மென்ட் பத்திரங்கள் மற்றும் 27.09.2017 தேதியிட்ட ஆவண எண்.5711/2017 கிரய பத்திரம் செல்லாது என்பது குறித்து சார் பதிவாளருக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். அவ்வாறு நான் அனுப்பிய அறிவிப்புக்கு நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் பெற்றுக்கொள்ளுமாறு பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது அந்த ஆவணம் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவ்வாறு பதில் அறிவிப்பாக கொடுக்கவில்லை வாய்மொழியாக சொன்னார்கள்.

2. அவ்வாறு சார் பதிவாளர் கொடுத்த பதிலின் அடிப்படையில் மாவட்ட பதிவாளர் செய்யார் மற்றும் பதிவு துறை டி.ஐ.ஜி வேலூர் ஆகியோருக்கு ஆட்சேபனை எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. அவ்வாறு பதிவுதுறை மேல் அதிகாரிகளுக்கு முறையாக ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காமல் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.16 வழக்கறிஞர் அறிவிப்பில் பிரிவு 80 சிபிசி குறித்து எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு பிரிவு 80 சிபிசி அறிவிப்பு கொடுக்காமல் அரசு துறைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அரசு அலுவலரான 3ம் பிரதிவாதி அவரது அரசு பணியை முறையாக செய்ய விடாமல் தடுக்கும் எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.